**O.S. No. 214/2024**

**Deposition of P.W. 2**

**Dated : 29.06.2026**

**Name : பகவதீஸ்வரன்**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சமூக சேவை செய்து வருகிறேன். கடந்த 1972 முதல் சமூக சேவை செய்து வருகிறேன். அதற்காக நான் பல்வேறு விருதுகள் வாங்கியுள்ளேன். என்னுடைய வருமானத்திற்காக திட்டங்கள் தயார் செய்து அரசுக்கு வழங்குவதன் மூலம் வருமானம் வரும். என் அதில் தொழில் நுட்ப ஊழியராக பணியாற்றி வருகிறேன். அந்த திட்டத்தில் ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பளம் என்னுடைய வருமானம் ஆகும். Center for social development என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன். நிறுவனம் பதிவு செய்ய பட்டதாகும். அதன் பதிவு எண் 77/1992 ஆகும். ஆண்டு தணிக்கை விவரத்தில் எனக்கு என் வருமானம் வரும் என்பது தெரியும் என்றால் சரிதான். மண்பாண்ட தொழிலாளர் சங்கத்தை வாதி நடத்தி வந்ததில் நான் ஆலோசராக இருந்தேன். சுமார் 15 வருடங்களாக அங்கு ஆலோசகராக பணியாற்றி வருகிறேன். மண்பாண்ட தொழிலாளர் சங்கத்திற்கு சட்ட விதிமுறைகள் உண்டு. அங்கு நடக்கும் கூட்டத்திற்கு நானும் கலந்து கொள்வேன். பிரதிவாதியும் மண்பாண்ட தொழிலாளர் சங்கத்தில் பொறுப்பில் இருந்துள்ளார். நீதிமன்ற அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். வாதியும் நானும் நீதிமன்றத்திற்கு ஒன்றாக தான் வந்தோம் என்றால்

சரிதான். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என தெரியும். கூட்டத்தில் பங்கு கொள்வதற்கான பதிவேடுகள் உண்டு அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். வழக்கு தொடர்பாக அனைத்தும் வாதி சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. கடன் பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என்னுடைய அலுவலகமான center for social development அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. அப்போது அங்கு வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர்கள் இருந்தார்கள். என்னுடைய அலுவலகம் உள்ள பகுதி நாகர்கோவில் சார்பதிவாளர் அலுவலக வரம்பு எல்லைக்குள் வரும். நான் சட்ட ஆலோசகர் என்பதால் கடன் பத்திரம் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என சொன்னேனா என்றால் சொன்னேன். கொடுக்கப்பட்ட பணத்தின் எத்தனை ரூபாய் கட்டுகள் இருந்தது என்றால் தெரியாது ஆனால் பணம் கொடுத்தார். என் முன்னிலையில் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடன் பத்திரத்தை பிரதிவாதி எழுதினார். பிரதிவாதி கடன் பத்திரத்தில் எந்த நிற மையில் கையெழுத்து செய்தார் என்றால் தெரியாது. பத்திரத்தில் பிரதிவாதி எத்தனை கையெழுத்து செய்தார் என்றால் ஒரு கையெழுத்து செய்தார். வாதியிடம் பணம் பெற்று கொண்டு வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பத்திரத்தில் பிரதிவாதியின் கை ரேகை பெறப்பட்டதா என்றால் இல்லை. வழக்கிற்காக பத்திரம் ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 2023 ஆம் வருடத்திற்குள் பணம் ரூபாய் 1 இலட்சம் திரும்ப கொடுக்க வேண்டும் என்றும் 2024 ஆம் வருடம் ஜனவரி மாதத்திற்குள் 1 இலட்சம் கொடுக்க

வேண்டும் என நிபந்தனை உடன் பத்திரம் எழுதப்பட்டது. நான் ஏற்கனவே வேறு ஒரு வழக்கில் சாட்சியம் அளிக்க வந்து இருக்கிறேன். கடன் பத்திரத்தில் நிபந்தனைகள் விதிக்கலாமா என்ற விவரம் தெரியும். கடன் பத்திரம் வாதியால் போலியாக தயாரிக்கப்பட்டது என்றும் அதற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பணம் பெற்று கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.